[1984 மார்ச் 5

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, வட நாட்டில் எல்லாம் கடுகு எண்ணெயை அதிகமாக உபயோகிக் கிறார்கள். ஆதலால் கடுகு எண்ணெய் தயாரிக்கும் தொழிற் சாலையை அமைத்தால் நமது அரசுக்கு அதிக இலாபம் கிடைப் பதோடுகூட அதை ஏற்றுமதி செய்தால் அதிக இலாபம் கிடைக்கும். ஆகவே அரசு கடுகு எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை அமைக்க பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: வட நாட்டில் அதிகமாக கடுகு எண்ணெய் பயன்படுத்தப் படுகிறது என்பது உண்மைதான். வட நாட்டுக்கு ஒத்து வருகிற பல பொருட் கள் தென் நாட்டுக்கு ஒத்துவராது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, கடுகு எண்ணெய் கொஞ்சம் உஷ்ணமாகத்தான் இருக்கும். வட நாடு குளிர் பிரதேசமாதலால் அங்கே அதை அதிகமாகப் பயன்படுத்து கிறார்கள். தமிழ் நாட்டில் இந்த கடுகு எண்ணெயை அறிமுகப்படுத்தினால் அதை மக்கள் உபயோகிக்கும் அளவு அதிகமாக இருக்குமா? கடுகு எண்ணெய் சாப்பிடும் போது 'வாமிட்டிங்' ஏற்படுவதை வட நாட்டில் நாங்கள் போகும் போது பார்த்தோம். ஆகவே கடுகு எண்ணெய்க்கு தமிழ் நாட்டில் வரவேற்பு இருக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: உங்களுக்கு வாந்தி வந்ததிலிருந்தே அதற்கு வரவேற்பு இல்லை என்று தெரிகிறது.

மாவட்டந்தோறும் விவசாய உற்பத்திக் குழு அமைக்கும் திட்டம்.

(162—*வினா எண். 21279)—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டந்தோறும் விவசாய உற்பத்திக் கமிட்டி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) மற்றும் (ஆ): மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களின் விவசாய நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து, தற்போதுள்ள குறைந்த நீர்வளத்தைப் பயன்படுத்தக்கூடிய இடங்களில் நல்ல முறையில் பயன்படுத்தி அதிக விளைச்சலை அடைய வேண்டும் என்று

அரசு கருதியது. எனவே மாவட்ட ஆட்சியாளர்கள் தலைமையில் விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளின் அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்ட "வேளாண்மை உற்பத்திக் குழுக்கள்" அமைக்கப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டதாகச் சொல்கிறார்கள். எல்லா மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட குழுக்கள் அமைக்கப்பட்டு விட்டனவா? இந்தக் குழு விவசாயிகளுக்கு எந்தெந்த வகையில் உதவி செய்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இது வேளாண்மை தொடர்பான அலுவலர்களைக் கொண்ட குழு. வேளாண்மைத் துறை, பாசனம், பொதுப்பணித்துறை, கூட்டுறவு, மின்சாரம் ஆகிய துறைகளைச் சார்ந்த அலுவலர்களை ஒருங்கிணைத்து இந்தக் குழுவை அமைக்க வேண்டும். வறட்சி போன்ற சமயத்தில் என மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். இந்தக் குழுக்கள் ஆங்காங்குள்ள நீரின் அளவு, பயிரிடும் பரப்பளவு, மின்சாரம் கூட்டுறவு கடன் வசதி போன்றவற்றை ஒட்டுமொத்தமாகத் தெரிந்து கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைக்கிறது என்ற வகையில் இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இந்தக் குழுக்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

(முற்பகல் 9–30)

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மாவட்ட விவசாய நலக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இநதக் குழுவினுடைய பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு, அதைச் செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அந்தப் பரிந்துரைகள் எந்த அளவுக்குத் தேவைப்படுகிறதோ, அந்த அளவிற்கு நிதி ஆதாரங்களை ஆராய்ந்து அதன் அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக நான் ஒரு விவரத்தைத் தெரிந்து கொள்வதற்காக கேட்க விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் இப்படி இந்தக் குழு எத்தனை முறைகள் கூடியது? அந்தக் குழு அனுப்பிய பரிந்துரைகள் என்ன? அதை அரசு ஏற்று நடைமுறைப்படுத்தி உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் குழு வறட்சி தாக்குகின்ற நேரத்தில் வாரத்திற்கு ஒருமுறை கூட வேண்டுமென்று ஆணையிடப்பட்டது. அதற்குப் பிறகு, ஓரளவிற்கு மழை பெய்து நிலைமை சீரடைந்ததற்குப் பிறகு, மாதந்தோறும் இக்குழு கூடலாம் என்று தெரிவிக்கப்பட்டது. எல்லா மாவட்டங்களிலும் அந்தக் குழுக்கள் கூடி, பரிந்துரைகளை அனுப்பியுள்ளன. வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றி தனியாக விவரம் வேண்டுமென்றால், தனிக் கேள்வி போட வேண்டும்.

கரும்புப் பயிரைத் தாக்கும் குருத்துப் பூச்சியை அழிக்க புதிய திட்டம்.

(163—வினா எண். 21535) திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கரும்புப் பயிரைத் தாக்கும் குருத்துப்பூச்சியை அழிக்க அரசிடம் புதிய திட்டம் எதுவும் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இல்லை.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கரும்புப் பயிரை தாக்கும் குருத்துப் பூச்சியை ஒழிப்பதற்கு அரசிடம் புதிய திட்டமில்லை என்று சொன்னார்கள். விவசாயிகள் கரும்பைப் பயிர் செய்து, பயிர் முளைக்க ஆரம்பிக்கின்ற காலத்திலே இந்த குருத்துப் பூச்சி தாக்குவதினால், அந்தக் கரும்புப் பயிர்கள் அழிந்து விடுகின்றன. அதைப் போக்குவதற்கு புதிய முறையில் ஏதாவது திட்டங்கள் அல்லது புதிய விதைகள் கண்டுபிடித்து, அதை அரசு அறிமுகப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கரும்புக் கரணைகள் நடும்போது, வயலில் சோகைகளை 10 முதல் 15 செ. மீ. உயரத்தில் பரப்பி வைத்தால் குருத்துப் பூச்சிகளின் தாக்குதல் குறைந்து காணப்படுகிறது என்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறு சோகை பரப்பபடாத வயல்களில் நட்ட 30-வது நாளில் அசோட்ரின் நுவக்கான், என்டோ சல்பான், லின்டேன் அல்லது செவிடால் போன்ற மருந்துகளை பயன்படுத்தலாம் என்ற அறிவுரை தந்திருக்கிறது. ஒட்டுண்ணி மூலம் இடைக்கணுப் புழுக்களைக் கட்டுப்படுத்தலாம் என்ற வகையில் ஒட்டுண்ணி விடும் திட்டம் 21 நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.